**திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.த.ப.ஜெய்பீம்**

ந.க.10968/2019/அ4 நாள்: 25.07.2024

பொருள் : பொதுப் பணியாளர்கள் - கருணை அடிப்படை பணிநியமனம் - திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு - திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் - இளநிலை வருவாய் ஆய்வாளர் - திரு.வி.தருண் - என்பவரின் பணியினை 05.09.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை:
1 திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை 14994/2019/அ4 நாள்:19.02.2021.
2 அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் நலன் திறன் மற்றும் மேம்பாட்டுத்துறை நாள்:08.03.2023
3 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்:26.07.2021 மற்றும் கடைசியாக 13.03.2023.
4 அரசு கடித எண்.5532/G2/2023-1 மனிதவள மேலாண்மைத்(G) துறை நாள்:20.09.2023.
5 சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக கடிதம் ஆ.கு.3/4600/2024 நாள்:28.02.2024.

* * * * * *

உத்தரவு :-

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில், திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.வி.தருண் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, 05.09.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு பார்வை-3ல் காணும் கடிதங்கள் மூலம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

2) பார்வை-5ல் காணும் வருவாய் நிருவாக ஆணையரக கடிதத்தில், பார்வை 2-ல் காணும் அரசாணையின்படியும், பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்பட்ட பணியினை ஏனைய விதிகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் பார்வை 4-ல் குறிப்பிட்டுள்ள அரசு மனித வள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படியும் முடிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

3) எனவே திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.வி.தருண் என்பவருக்கு தனியர் பணியில் சேர்ந்த நாளான 05.09.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஒம்/-த.ப.ஜெய்பீம்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
திருப்பூர்

பெறுநர் :
திரு.வி.தருண்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம் ,
திருப்பூர் தெற்கு - திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் மூலம் சார்வு செய்ய

நகல்: வட்டாட்சியர், திருப்பூர் தெற்கு/அவினாசி
நகல்: "ஆட" இருக்கைக்கு, உபரி - 1.

// உண்மை நகல் // உத்திரவுப்படி //

3/7/24

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)(பொ),
திருப்பூர்.

3/7/24

Scanned with OKEN Scanner